**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்  20-ஆம் நாள்,**
**CC.151/2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 20.08.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால்  சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | V. சேகர் | வயது | : | 63 |
| த.பெ | : | வேலு | நிலை | : | **PW-31 (LW-31)** |

**A1 to A5 are present with counsel. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரணை -**

1) நான் தமிழ்நாடு காவல்துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2022-ஆம் தேதியன்று பணி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 2013-ஆம் வருடம் கடலூர் மாவட்ட குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் நமுனா CN K1 / 004204 / 14 Dated 22.05.2014-ன்படி பரங்கிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.306/2013 வழக்கை மேல் விசாரணை செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி வழக்கை பரங்கிப்பேட்டை காவல் ஆய்வாளர் மற்றும் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்து இந்த வழக்கை நான் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.26.05.2014-ஆம் தேதியன்று பட்டியல் சாட்சிகள் 11.விஜயா, 12.செந்தில்வேல், 13.செந்தில்நாதன்,  14.மனோகரன், 15.கோவிந், 16.உதயச்சந்திரன், 17.ராமதாஸ், 18.பாலமுருகன் இவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.06.2014-ஆம் தேதி சம்மன் மூலம் ஆஜராக எதிரிகள் முருகேசன், சுந்தர்ராஜன் இவர்களை மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு வரவழைத்து சாட்சிகள் அறிவழகன், கார்த்திகேயன் இவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி  எதிரி முருகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் **அ.சா.ஆ.90** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிரி சுந்தர்ராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது  கையொப்பம் **அ.சா.ஆ.91** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 13.06.2014-ஆம் தேதியன்று வடலூர் சென்று 13.15 மணிக்கு எதிரி அருளப்பராஜ்  என்பவரை அவரின் வீட்டின்முன்பு கைது செய்து மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு அழைத்துவரப்பட்டது. மேற்படி எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை  சாட்சிகள் அறிவழகன், கார்த்திகேயன் இவர்கள் முன்னிலையில்  பதிவு

செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.92** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரி அருளப்பராஜ் மற்றும் சாட்சிகளுடன் அவரது வீட்டிற்கு சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த ஆவணம்,

1. 29.10.2013 என்று Before NGT (South Zone) சென்னை என்று தலைப்பிட்டு Application No.77 of 2013 என்று குறிப்பிட்டுள்ள போலி ஆவணத்தையும்,
2. 31.10.2013-ஆம் தேதி கடலூர் மாவட்ட RDO அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கடித நகல் ஒன்றையும்,

சாட்சிகள் அறிவழகன், கார்த்திகேயன் முன்னிலையில் மகஜரில் அன்றைய தினமே 17.30 மணி முதல் 18 மணி வரை மேற்படி எதிரியின் வீட்டின்முன்பு மகஜரில் கைப்பற்றினேன் அந்த கைப்பற்று மகஜர் **அ.சா.ஆ.93** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி மகஜரில் கைப்பற்றிய 1-ஆவது ஆவணம் ஏற்கனவே அ.சா.ஆ.79 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மகஜரில் கைப்பற்றிய 2-ஆவது ஆவணம் **அ.சா.ஆ.94** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) பின்னர் எதிரியுடன் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திலிருந்து 21 மணிக்கு எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பின்னர் 14.06.2014-ஆம் தேதி எதிரி K.T.S ராஜா என்பவரை சம்மன் மூலம் ஆஜராக சொல்லி அதன் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு வரவழைத்து சாட்சிகள் அறிவழகன்,கார்த்திகேயன் இவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி எதிரி K.T.S ராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் **அ.சா.ஆ.95** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 18.06.2014-ஆம் தேதி எதிரி அருளப்பராஜ் என்பவரை போலிஸ் காவலில் வைத்து விசாரிக்க பரங்கிப்பேட்டை நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்து அனுமதிக்கப்ட்டதன் பேரில் 23.06.2014-ஆம் தேதி எதிரி அருளப்பராஜ் போலிஸ் காவலில் எடுக்கப்பட்டார். அன்றைய தினம் எதிரி அருளப்பராஜ் என்பவரிடமிருந்து சாட்சிகள் அறிவழகன், கார்த்திகேயன் ஆகியோர்கள் முன்னிலையில் மேற்படி எதிரி போலி ஆவணத்தில் எழுதிய எண்களை-2 தாள்களிலும் Most urgent என்ற வார்த்தைகளை-1 தாளிலும்,This matter should be treated as Most urgent என்ற வாசகங்களை - 1 தாளிலும், தேதிகளை 1-தாளிலும், கையொப்பத்தை 1-தாளிலும், SO கையெழுத்தை 1-தாளிலும், Cancelled என்ற வார்த்தையை 1-தாளிலும், குமார் என்பவரின் கையொப்பத்தை 1-தாளிலும் மொத்தமாக 9 தாள்களில் மாதிரியாக எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது. அந்த 9 தாள்களின் வரிசை **அ.சா.ஆ.96** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) அன்றைய தினமே மேற்படி எதிரி அருளப்பராஜ் என்பவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அறிவழகன், கார்த்திகேயன் இவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது. மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 24-06-2014-ஆம் தேதி எதிரி மற்றும் சாட்சிகள் பாலு மற்றும் கமலநாதன் ஆகியோர்களுடன் சென்னையில் உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயம் (South Zone) அலுவலகத்திற்கு சென்று சாட்சி குமார், துணைப்பதிவாளர், தேசிய பசுமை தீர்ப்பாயம் (South Zone), என்பவர் ஆஜர் செய்த NGT /CB/Estt/08/2012 Dated 25.10.2013 என்றுள்ள உத்தரவின் சான்றிட்ட நகலை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்று மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.97** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மகஜரில் கைப்பற்றிய ஆவணம் ஏற்கனவே அ.சா.ஆ.82 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், மேலும் சாட்சிகள் குமார், மோகன் குமார், கண்ணன், சுரேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) பின்னர் மேற்படி எதிரி அருளப்பராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 24-06-2014-ஆம் தேதி எதிரி மற்றும் சாட்சிகள் பாலு மற்றும் கமலநாதன் ஆகியோர்களுடன் அதே தினம் 15 மணி முதல் 16 மணி வரை சென்னை தம்புசெட்டித் தெருவில் உள்ள EWATT TELLECOMS & INTERNET BROWSING CENTRE என்ற விலாசம் உள்ள BROWSING Center-க்கு சென்று மேற்படி BROWSING Center-ன் உரிமையாளர் சாட்சி முகமது அப்துல் காதர் என்பவர் ஆஜர் செய்த 29.10.2013-ஆம் தேதியில் BROWSING செய்தவர்களின் பட்டியல் அடங்கிய விவரம் கொண்ட 5-தாள்களை மேற்படி சாட்சிகள் பாலு மற்றும் கமலநாதன் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்று மகஜர் **அ.சா.ஆ.98** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மகஜரில் கைப்பற்றிய 5 - தாள்களின் வரிசை அ.சா.ஆ.83 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சி அப்துல் காதர் என்பரை விசாரித்து வாகக்குமூலம் பதிவு செய்தேன். அதே தினம் சென்னை தலைமை செயலகம் சென்று எதிரி அருளப்பராஜ் போலியாக தயார் செய்த ஆவணத்தை தலைமை செயலகத்தில் உள்ள Welcome Hotel & Telelinks என்ற கடையிலிருந்து கடலூர் மாவட்ட அலுவலகத்திற்கு Fax அனுப்பியதற்காக அதன் உரிமையாளர் கண்ணன் என்பவரையும் சாட்சிகள் ராஜு,பாலு,கமலநாதன் ஆகியோர்களையும் அன்றைய தினமே தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியுடன் கடலூர் வந்து எதிரியை நீதிமன்றத்தில் 25.06.2014-ஆம் தேதி ஒப்படைத்தேன்.

6) 25.06.2014-ஆம் தேதி சாட்சிகள் வசந்த ஜோதி, பாரதிதாசன், முருகதாஸ், கனகசபை இவர்களை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 26.06.2014-ஆம் தேதி சாட்சி விஜய் **ஸ்ரீ**, விஜய், காவலர் கருணாகரன் ஆகியோரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் என்னுடைய விசாரணையில் ஆஜர் எதிரிகள் 5 பேரும் வாதி வசந்த ஜோதி என்பவர் நடத்தி வந்த பெட்ரோல்பங்கை மூடுவதற்கு சதி திட்டம் தீட்டி போலியான ஆவணங்களை தயார் செய்தும் அதனை பயன்படுத்தி வாதி வசந்த ஜோதி என்பவரின் பெட்ரோல்பங்கை மூடியுள்ளனர் என்பது தெரியவருகிறது. மேலும் 21.07.2014-ஆம் தேதி முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட எதிரிகள் ஆதிலட்சுமி, சரண் ராஜ், செல்வம், பிரகாஷ், யுவராஜ் மற்றும் மதன் இவர்கள் இந்த வழக்கில் எந்தவித குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை என்ற காரணத்தினால் வழக்கிலிருந்து அவர்களை நீக்கம் செய்து தனி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த எதிரிகள் நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.99** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் ஆரோக்யராஜ் மற்றும் மேல் விசாரணை செய்த ஆய்வாளர் பாலசுப்ரமணியன் என்பவரையும் விசாரித்து வழக்கின் புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரிகள்மீது இ.த.பிரிவுகள் 465,466,471,379,420 r/w 120(b)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு சம்மந்தமாக டெல்லியில் உள்ள பசுமை தீர்ப்பாயம் தானாக முன்வந்து ஒரு வழக்கை பதிவு செய்து அந்த வழக்கு சம்மந்தமாக எதிரிகளை டெல்லியில் உள்ள பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜர் செய்தேன்.

**எதிரிகள் 3,4,5-ஆம் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) முதல் தகவல் அறிக்கையில் ஆஜர் எதிரிகளை தவிர ஆதிலட்சுமி, சரண்ராஜ், செல்வம், பிரகாஷ், மதன் ஆகியோர்கள் பெயரும் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். சந்தேகத்தின் பெயரில்தான் வழக்கின் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 22.05.2014-ஆம் தேதியன்றுதான் வழக்கின் கோப்பு என்னிடம் வழங்கப்பட்டு நான் விசாரணையை மேற்கொண்டேன். என் விசாரணைக்கு முன்பாக இந்த வழக்கின் குற்ற எண் சம்மந்தமாக பரங்கிப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் ஆரோக்கியராஜ் பட்டியல் சாட்சி 1-10 வரையிலானவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் பாலு (LW -9), கமலநாதன் (LW -10) ஆகியோரை வைத்து பார்வை மகஜரானது 16.11.2013-தேதியன்று தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.பாலு (LW-9), கமலநாதன் (LW -10) ஆகியோரின் போன் நம்பர் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 13.06.2014-ஆம் தேதி எதிரிகள் அருளப்பராஜ், ராஜா, சுந்தர் ராஜன், முருகேசன் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலத்தினை நான் பெற்றேன் என்றால் சரிதான். 13.06.2014-ஆம் தேதிக்கு முன்பு எதிரிகளுக்கு போலிஸ் சம்மன் அனுப்பி விசாரித்தேனா என்றால் இல்லை.

2) எதிரி காவல் அதிகாரியிடம் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சிய வலிமை இல்லை என்பது எனக்கு தெரியுமா, தெரியதா என்றால் அதை நீதிமன்றம்தான் முடிவு செய்யும். எதிரி அருளப்பராஜூடம் இருந்து 13.06.2014-ஆம் தேதியன்று ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். எதிரி அருளப்பராஜ் எங்கே வைத்து கைது

செய்யப்பட்டார் என்றால் வடலூர் பஸ் ஸ்டான்ட் அருகே கைது செய்யப்பட்டார். எதிரியினை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி ஏன் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சாட்சிகளைதான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வாக்குமூலம் பெறுவோம். போலிஸ் காவலில் இருக்கும்பொழுது எதிரி அருள்ளப்பராஜிடம் 2-ஆவதாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 16.11.2013-ஆம் தேதி பார்வை மகஜரில் கையொப்பமிட்ட சாட்சிகளான பாலு, கமலநாதன் ஆகியோர்தான் 24.06.2014-ஆம் தேதி ஏற்பட்ட ஆவணங்களுக்கும் சாட்சிகளாக இருந்தனர் என்றால் சரிதான்.

3) மேற்படி பாலு, கமலநாதன் சாட்சிகளின் தொடர்பு எண் இல்லாதபோது எவ்வாறு அவர்களை மீண்டும் அழைத்து சாட்சிகளாக்கப்பட்டனர் என்றால் சரியாக தற்போது ஞாபகமில்லை. எதிரிகள் ராஜா, முருகேசன், சுந்தர் ராஜன் ஆகியோர் எவ்வித குற்றமும் செய்தார்கள் என்பதற்கு எவ்வித ஆவணமும் இல்லையென்றால் சரியல்ல. ஆவணங்கள் உண்டு,அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேன். PW-1 வசந்த ஜோதி, அவரது கணவர் கனகசபை (PW-3) ஆகியோர்களுக்கும் 3,4,5-ஆம் எதிரிகளுக்கு இடையே உரிமையியல் வழக்கு நடந்தது என்றாலும் இதனால் அவர்களுக்கிடையே முன்விரோதம் இருந்தது என்றாலும் சரிதான். கனகசபை (PW-3) கொடுத்த அழுத்தத்தின் பேரில் தான் 3,4,5-ஆம் எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. வசந்த ஜோதிக்கு சொந்தமான பெட்ரோல்பங்க் மூடப்பட்டதற்கும் 3,4,5-ஆம் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லையென்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், எதிரிகள் தன்னிச்சயைாக ஒப்புதல் வாக்குமூலத்தினை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

1-ஆம் மற்றும் 2-ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**